**உள்ளூராட்சி விரிவாக்கல் துறைச் செயற்திட்டம் (புற நெகும) - 2020**

---

உள்ளூராட்சி விரிவாக்கல் துறைச் செயற்திட்டத்தின் (புற நெகும) 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 ஒக்தோபர் 21 ஆந் திகதிய 2790–எஸ்ஆர்ஜ(எஸ்எவ்) மற்றும் 2016 நவம்பர் 02 ஆந் திகதிய 3431–எஸ்ஆர்ஜ(எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சாகவிருந்த தற்போதைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகக் காணப்படுகின்றதுடன் 07 மாகாணங்களின் மாகாண சபைகள் செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் முகவர்களாகக் காணப்படுகின்றன. கணக்களிப் பொறுப்பு, நிதிசார் மற்றும் தொழில்நுட்பரீதியாக பலப்படுத்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளினூடாக செயற்திட்டத்தின் முன்னேற்றமடைந்த உள்ளூராட்சி உட்கட்டமைப்பு செயற்பாடுகள் மற்றும் பயனுறுதிமிக்க சேவை விநியோகம் என்பவற்றை அடைதல் செயற்திட்டத்தின் நோக்கமாகும். நீடித்த சிறுநீரக நோய்களினால் பாதிக்கப்பட்ட இலங்கையில் அபிவிருத்தி குறைந்த 07 மாகாண பிரதேசங்களிலுள்ள உள்ளூராட்சி சபைகள் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்படும் உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளினை முன்னேற்றுவது செயற்திட்டத்தின் பின்தொடர் கடன்களின் நோக்கமாகும். ஆகையினால், நீர் வழங்கல் முறைமைகளின் முன்னேற்றம், உட்கட்டமைப்பு அடிப்படை சேவை வழங்கல் உள்ளூராட்சி கொள்கை சீர்திருத்தங்கள் மற்றும் இயலளவுகளை வலுப்படுத்துதல் தொடர்பான சிக்கல்கள் முன்வைக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றன. 2790 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 8,940 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 68.8 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 7,670 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 59 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 1,339.33 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 9.8 மில்லியன் மிகுதி மதிப்பிடப்பட்ட கிரயம் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்பு செய்யப்பட்டது. 3431 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) பின்தொடர் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், ரூபா 8,700 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 60 மில்லியன் மேலதிக கடன் ஆரம்ப செயற்திட்டத்தின் செயற்திறனை அதிகரிப்பதற்கு 2017 ஆம் ஆண்டில் பெறப்பட்டது. மதிப்பிடப்பட்ட மொத்த செயற்திட்ட கிரயம் இலங்கை அரசாங்கத்தின் ரூபா 1,071.47 இற்கு சமமான ஐ.அ.டொலர் 7.8 மில்லியனுடன் சேர்த்து ரூபா 9,771.47 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 67.8 மில்லியனாகும். செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2012 யூலை 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2015 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட செயற்பாடுகளின் பூர்த்திசெய்தல் திகதி 2021 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

---

செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 2019 மார்ச் 15 ஆம் திகதிய 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தி | செயற்திட்ட வழிகாட்டல் குழுவின் கூட்டங்கள் 02 மாதங்களிற்கு ஒரு தடவை நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 03 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. | கருத்துரை வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் செயற்திட்ட வழிகாட்டல் குழுவின் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

செயற்திட்ட அமுல்படுத்தல் திட்டங்களின் பிரகாரம், 07 மாகாணங்களில் அவர்களின் உட்கட்டமைப்பு ரீதியான தேவைப்பாடுகளினை மேம்படுத்துவதற்கு 105 உள்ளூராட்சி சபைகளுக்கு செயற்திட்டம் உதவியளித்திருந்ததுடன் 178 உள்ளூராட்சி சபைகளின் தொடர்புடைய அபிவிருத்தி வேலைகள் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. மேலும் பிற்சேர்க்கை கடன் வசதிகளின் கீழ் 29 உள்ளூராட்சி சபைகளில் 29 நீர் வழங்கல் செயற்திட்டங்கள், 35 நிர்மாண வேலைகளை மேற்கொள்வதற்கு பட்டியலிடப்பட்டிருந்ததுடன் அதில் 03 நீர் வழங்கல் செயற்திட்டங்கள் மற்றும் 11 உட்கட்டமைப்பு செயற்திட்டங்கள் முன்னைய ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. 8 நீர் வழங்கல் செயற்திட்டங்கள் மற்றும் 12 உட்கட்டமைப்பு செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. மேலும் 6

மாதங்களிற்கு மேலாக 17 செயற்திட்டங்கள் தாமதமாகியிருந்ததுடன் தாமதத்திற்கான காரணங்கள் பின்வருமாறுள்ளன.

### 3.1.1 உப செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதிலுள்ள தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல. | நடவடிக்கை செயற்பாடு | பூர்த்தி செய்வதற்கு பட்டியலிடப்பட்ட திகதி | தாமதம் (மாதங்கள்) | தாமதத்திற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|
| (அ) | நுவரவெவ நீர் சுத்திகரிப்பு பொறியின் இயலளவை மேம்படுத்துதல் – அனுராதபுரம் பி.ச. | 2020 மார்ச் 24 | 09 | ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றல் |
| (ஆ) | செவகம கால்வாய் 3 பகுதி வரையான குழாய் வரிசைகளின் நீடிப்பு மற்றும் செவகம நீர் கோபுரம் வரையான பரிமாற்றல் பிரதான நீடிப்பு - தமன்கடுவ பி.ச. | 2020 பெப்ரவரி 24 | 10 | -மேற்படி- |
| (இ) | நிக்கவெரட்டியவில் உள்ள நீர் வழங்கல் திட்டத்தின் விரிவாக்கம் – அம்பன்பொல பி.ச. | 2019 திசெம்பர் 31 | 12 | கொவிட் - 19 முக்கியமாக தாக்கமளித்தது. |
| (ஈ) | தம்புள்ளை கிராமப் பகுதி மற்றும் கண்டலம ஆகியவற்றிற்கான நீர் வழங்கல் விரிவாக்கம் | 2020 யூன் 30 | 06 | -மேற்படி- |
| (உ) | இனாமலுவ மற்றும் கித்துல்ஹிட்டியாவ வரையான நீர் வழங்கல் விரிவாக்க நிர்மாணம் | 2020 மே 01 | 08 | -மேற்படி- |
| (ஊ) | சீகிரியா மற்றும் ஹபரணைக்கான நீர் வழங்கல் விரிவாக்க நிர்மாணம் | 2020 மே 01 | 08 | -மேற்படி- |
| (எ) | கலேவெல மற்றும் தித்தவெல்கொல்ல வரையான நீர் வழங்கல் விரிவாக்க நிர்மாணம் | 2020 யூன் 30 | 06 | -மேற்படி- |
| (ஏ) | குருசவத்த குடிநீர் விநியோக செயற்திட்டம் | 2019 செப்தெம்பர் 01 | 16 | -மேற்படி- |
| (ஐ) | பிரதேச சபை அலுவலக கட்டிட நிர்மாணம் - நரம்மல பி.ச. | 2019 யூலை 24 | 17 | -மேற்படி- |
| (ஒ) | கதிரன கேட்போர்கூடத்தின் நிர்மாணம் – கடான பி.ச. | 2019 யூன் 26 | 18 | ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றல் |
| (ஓ) | மஹாபகே சந்தையுடன் கூடிய பல்நோக்கு கட்டிடத்தை நிர்மாணித்தல் – வத்தளை பி.ச. | 2019 பெப்ரவரி 01 | 11 | வெலிசர கடற்படை முகாமிற்கு அருகில் இது காணப்படுவதன் காரணமாக கொவிட்-19 கடுமையாக பாதித்திருந்தது |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஔ) | பொல்கொல்லவில் பிரதேச சபை அலுவலகம், நூலகம் மற்றும் சுகாதார நிலையத்தை நிர்மாணித்தல் – குண்டசாலை பி.ச. | 2019 நவம்பர் 13 | 12 | காணி பிரச்சனை காரணமாக மீள வடிவமைக்கப்பட்டது. |
| (க) | கெகுநடுர உப நகரத்தை மேம்படுத்துதல் – மாத்தறை பி.ச. | 2020 மார்ச் 07 | 10 | பிரதேச சபையால் முன்பக்க கட்டிடம் இடம்மாற்றப்படுதல் |
| (கா) | வரக்காபிட்டியவில் தகன மற்றும் இறுதிச் சடங்கு நிலையத்தை நிர்மாணித்தல் - வெலிகம பி.ச. | 2020 மார்ச் 01 | 10 | சமூக பிரச்சனைகள் காரணமாக ஆரம்ப தாமதம் |
| (கி) | ஹோமாகம நகரில் கழிவறைத் தொகுதியுடன் கூடிய பொதுச் சந்தை மற்றும் வாகன தரிப்பிடத்தை நிர்மாணித்தல் | 2019 நவம்பர் 13 | 13 | ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றல். |
| (கீ) | வட்டுவவில் பொது சந்தை நிர்மாணம் - பாணந்துறை பி.ச. | 2020 மார்ச் 11 | 09 | -மேற்படி- |
| (கு) | நஹேன பல்நோக்கு கட்டிடத்தின் நிர்மாணம் - களனி பி.ச. | 2020 ஏப்ரல் 30 | 08 | சமூக பிரச்சனைகள் காரணமாக ஆரம்ப தாமதம் |

| | |
|---|---|
| **முகாமைத்துவத்தின் பதில்** | பல வேலைகள் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்படும். மேலும் மிகுதி வேலையை விரைவுபடுத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. |
| **கணக்காய்வாளரின் பரிந்துரை** | தேவையான தர நிலையை உறுதிப்படுத்தி சிவில் வேலைகளை உடனடியாக பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்ததாரருக்கு செயற்திட்டமானது தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். |

**3.1.2 செயற்திட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதிலுள்ள தாமதங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | செயற்பாடுகள் | உள்ளூராட்சி சபைகள் | ஒதுக்கீடு ரூபா மில்லியன் | ஆரம்பித்த திகதி | தாமதமான மாதங்கள் | தாக்கங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| (அ) | கலாவெவ சுத்திகரிப்பு பொறியை மேம்படுத்துதல் | கலாவெவ | 387 | 2019 மார்ச் 15 | 24 | (அ) பூர்த்தி செய்வதில் தாமதம்<br>(ஆ) கிரய மதிப்பீடுகளை மேலதிகமாக செலவிடுதல்<br>(இ) எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் குறித்துரைக்கப்பட்ட தரப்பினரால் பெறப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | ஒப்பந்தங்களின் சாத்தியமான கிரய அதிகரிப்புக்கள் மற்றும் தேவையற்ற கால நீட்டிப்புகள் என்பன தவிர்க்கப்பட வேண்டும். |
| (ஆ) | தம்புள்ளை கிராமப் பகுதி மற்றும் கந்தளம ஆகியவற்றிற்கான நீர் வழங்கல் விரிவாக்கம் | தம்புள்ளை/ கந்தளம | 564 | 2019 பெப்ரவரி 28 | 28 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | இனாமலுவ மற்றும் கித்துல்ஹிட்டியாவவிற்கான நீர் வழங்கல் விரிவாக்க நிர்மாணம் | இனாமலுவ/ கித்துல்ஹிட்டியாவ | 491.99 | 2019 சனவரி 02 | 22 | -மேற்படி- | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | -மேற்படி- |
| (ஈ) | சீகிரியா மற்றும் ஹபரணை | சீகிரியா/ ஹபரணை | 415 | 2019 சனவரி 02 | 21 | (அ) பூர்த்தி செய்வதில் தாமதம் | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | ஒப்பந்தங்களின் சாத்தியமான கிரய |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பகுதிகளுக்கான நீர் வழங்கல் விரிவாக்க நிர்மாணம் | | | | | (ஆ) கிரய மதிப்பீடுகளை மேலதிகமாக செலவிடுதல்<br><br>(இ) எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் குறித்துரைக்கப்பட்ட தரப்பினரால் பெறப்பட்டிருக்கவில்லை. | | அதிகரிப்புக்கள் மற்றும் தேவையற்ற கால நீட்டிப்புகள் என்பன தவிர்க்கப்பட வேண்டும். |
| (உ) | பத்தலயாய மற்றும் பெலகன்வெவவில் விநியோக வலையமைப்பை வழங்கி அமைத்தல் | பத்தலயாய | 284 | 2019 சனவரி 17 | 21 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |
| (ஊ) | பத்தலயாய மற்றும் பெலகன்வெவ சுத்திகரிப்பு பொறி | பெலகன்வெவ | 506.7 | 2019 சனவரி 17 | 21 | -மேற்படி- | கேள்வி மதிப்பீட்டு செயன்முறையை அமுல்ப்படுத்துவதில் தாமதங்கள் | -மேற்படி- |
| (எ) | மஹாவில குருஸ்வத்த குடிநீர் வழங்கல் செயற்திட்டம் | மஹாவில நாத்தாண்டியா | 33 | 2019 மார்ச் 01 | 23 | -மேற்படி- | கேள்வி மதிப்பீட்டுச் செயன்முறை நடைபெறுகின்றது. | -மேற்படி- |
| (ஏ) | கெகுநடுர உப நகரத்தை மேம்படுத்துதல் | கெகுநடுர மாத்தறை | 85.24 | 2019 மார்ச் 08 | 23 | -மேற்படி- | அமைச்சரவை அங்கிகாரத்திற்காக காத்திருக்கின்றோம். | -மேற்படி- |
| (ஐ) | மயான நிர்மாணம் | வறக்காபிட்டிய வெலிகம | 50 | 2019 மார்ச் 01 | 23 | -மேற்படி- | | -மேற்படி- |
| (ஒ) | பொது சந்தை நிர்மாணம் | வட்டுவ பாணந்துறை | 63.42 | 2019 மார்ச் 11 | 23 | (அ) பூர்த்தி செய்வதில் தாமதம் | ஏடிபீ இணக்கப்பாட்டிற்காக | ஒப்பந்தங்களின் சாத்தியமான கிரய |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | (ஆ) கிரய மதிப்பீடுகளை மேலதிகமாக செலவிடுதல்<br><br>(இ) எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் குறித்துரைக்கப்பட்ட தரப்பினரால் பெறப்பட்டிருக்கவில்லை. | காத்திருத்தல். | அதிகரிப்புக்கள் மற்றும் தேவையற்ற கால நீட்டிப்புகள் என்பன தவிர்க்கப்பட வேண்டும். |
| (ஓ) | நீர் வழங்கல் திட்டம் | கருவலகஸ்வெவ பி.ச. | 324.77 | 2021 சனவரி 06 | 33 | -மேற்படி- | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | ஒப்பந்தங்களின் சாத்தியமான கிரய அதிகரிப்புக்கள் மற்றும் தேவையற்ற கால நீட்டிப்புகள் என்பன தவிர்க்கப்பட வேண்டும். |
| (ஔ) | பஹலடிக்கல்ல கி.சே. பிரிவுக்கான நீர் வழங்கல் விரிவாக்கம் | பஹலடிக்கல்ல பி.ச. | 124.89 | 2020 நவம்பர் 16 | 43 | -மேற்படி- | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | -மேற்படி- |

### 3.1.3 செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமை

2017 ஏப்ரலிற்கு முன்னர் பின்வரும் உபசெயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டியிருந்த போதிலும் அவ் உபசெயற்திட்டங்கள் 2021 யூன் 30 வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| இல. | செயற்பாடுகள் | மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா மில்லியன் | தாக்கங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | தனமல்வில மற்றும் ஹம்பேகமுவ விநியோக முறைமைக்கான நீர் வழங்கல் திட்டம் | 1,270 | குறித்துரைக்கப்பட்ட தரப்பினரால் எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெறப்பட்டிருக்காமை. | நீர் வளம் இல்லாமை. | உப செயற்திட்டம் இயன்றளவு விரைவாக தொடங்கப்பட வேண்டும் அல்லது செயற்திட்ட நிர்வாகக் கைநூலில் உள்ள வேலைப் பட்டியல்கள் திருத்தம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | தனமல்வில மற்றும் ஹம்பேகமுவ திட்டத்திற்கான நீர் சுத்திகரிப்பு பொறி | 430 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | போர்ஹேல் பம்பி இல்ல குளோரினேட்டர்களின் (chlorinators) நிர்மாணம் – மத்திய மாகாணம் (மூன்று எண்ணிக்கைகள்) | 60 | -மேற்படி- | கருத்துரை வழங்கப்படவில்லை. | -மேற்படி- |
| (ஈ) | தனமல்வில மற்றும் ஹம்பேகமுவ திட்டத்திற்கான உட்செலுத்துதல் தொட்டி (Intake tank) | 100 | -மேற்படி- | நீர் வளம் இல்லாமை. | -மேற்படி- |
| (உ) | கொட்டகலையில் பிரதேச சபை கட்டிட நிர்மாணம் | 50 | -மேற்படி- | தேசிய வழிகாட்டல் குழுவால் அறிவுறுத்தப்பட்டவாறு காணிப் பிரச்சனை காரணமாக கைவிடப்பட்டது. | -மேற்படி- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஊ) | ஆர்கரபத்தனவில் பிரதேச சபை கட்டிட நிர்மாணம் | 50 | குறித்துரைக்கப்பட்ட தரப்பினரால் எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெறப்பட்டிருக்காமை. | தேசிய வழிகாட்டல் குழுவால் அறிவுறுத்தப்பட்டவாறு காணிப் பிரச்சனை காரணமாக கைவிடப்பட்டது. | உப செயற்திட்டம் இயன்றளவு விரைவாக தொடங்கப்பட வேண்டும் அல்லது செயற்திட்ட நிர்வாகக் கைநூலில் உள்ள வேலைப் பட்டியல்கள் திருத்தம் செய்யப்பட வேண்டும். |
| (எ) | பசறை நீர் வழங்கல் செயற்திட்டம் | 434.71 | -மேற்படி- | ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. | -மேற்படி- |

**3.2 விளைவற்ற/ பயன்படுத்தப்படாத/ குறைப்பயன்பாடுடைய வளங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**I. முன் அலுவலக முறைமை மற்றும் ஈ-புறநெகும மென்பொருள்**

| கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| மத்திய மாகாணம் மற்றும் வடமத்திய மாகாணத்தில் உள்ள 41 உள்ளூராட்சி நிறுவனங்களில், 17 பிரதேச சபைகள் செயற்திட்டத்தினால் அமுல்ப்படுத்தப்பட்ட ''முன் அலுவலக முறைமையை'' முழுமையாக நடைமுறைப்படுத்தியிருக்காததுடன் 16 பிரதேச சபைகள் மேற்படி முறைமையை அமுல்ப்படுத்தாமல் புதிய மாற்று மென்பொருளை கொள்வனவு செய்திருந்தன. | உள்ளூராட்சி சபைகளின் தகவல்கள் தொடர்பான முறைமை இலக்கை அடைந்திருக்கவில்லை. இதன் விளைவாக, அப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு குறித்துரைக்கப்பட்ட நலன் கிடைத்திருக்கவில்லை. | செயற்திட்ட நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கான பொறுப்புக்கள், செயற்திட்ட நடவடிக்கைகள் மாகாண செயற்திட்ட பணிப்பாளர்களுக்கு ஒதுக்கப்படுகின்றன. | தாமதமின்றி முறைமையை உருவாக்குவதற்கு உத்தியோகத்தர்களிற்கு ஊக்கமளிப்பதற்கு செயற்திட்டம் தேவைப்படுகின்றது. |

## II. சிவில் மற்றும் நீர் வழங்கல் செயற்திட்டங்கள்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | தாக்கங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | வனாத்தவில்லுவ நீர் வழங்கல் முறைமை | இப்பகுதியில் 4,333 குடும்பங்களுக்கு குடிநீர் வசதிகள் இல்லை. | இணங்கப்பட்டவாறு பிரதேச சபை அவை தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுத்திருந்தது. | பயனாளிகளுக்கு வசதிகளை வழங்கும் பொருட்டு செயற்திட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்கள் அடைந்துகொள்ளப்பட வேண்டும் |
| (ஆ) | ரெதீகம பல்நோக்கு கட்டிடம் மற்றும் பேருந்து நிலையம் | குறித்துரைக்கப்பட்ட நலன்கள் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் கீழ் அனைத்து நிர்மாணப் பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டு பிரதேச சபையால் இணங்கப்பட்ட நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்த பின்னர் பொதுமக்களுக்காக திறப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. | -மேற்படி- |
| (இ) | மாவத்தகம பேருந்து நிலையம் | குறித்துரைக்கப்பட்ட நலன்கள் பொதுமக்களுக்கு சென்றடையவில்லை. | மாவத்தகமவில் நிர்மாணிக்கப்பட்ட பஸ் நிலையம் அதன் செயற்பாடுகளை தொடங்கியிருக்கவில்லை. | நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | பொல்பிட்டிகம நீர் வழங்கல் முறைமை | இப்பகுதியில் 1,700 குடும்பங்களுக்கு குடிநீர் வசதிகள் இல்லை. | பொல்பித்திகம திட்டத்திற்கான நீர் பவுசரை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | மீகஹகியுல பேருந்து நிலையம் | குறித்துரைக்கப்பட்ட நலன்கள் பொதுமக்களுக்கு சென்றடையவில்லை. | அணுகும் வீதியை நிர்மாணிப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | பஸ் நிலையத்தை பயன்படுத்தும் பொருட்டு அணுகும் வீதியை நிர்மாணிப்பதற்கு பிரதேச சபைக்கு உதவியளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | பதரவெல பிரதேச சபையின் வாராந்த சந்தை, பல்நோக்கு கட்டிடம், கழிவறைகள், நீர் வழங்கல் முறைமை | குறித்துரைக்கப்பட்ட நலன்கள் பொதுமக்களுக்கு சென்றடையவில்லை. | கட்டிட நிர்மாணங்கள் பூர்த்திசெய்யப்பட்டு பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளதுடன் காலதாமதமின்றி நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு பிரதேச சபைக்கு அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது. இக் கட்டிடத்தை குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பொறுப்பாகும். | கட்டிடம் மற்றும் ஏனைய அபிவிருத்தி வேலைகளை குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களிற்கு பயன்படுத்துவதற்கு தேவையான வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | இரத்தோட்டை பிரதேச சபையின் வாராந்த சந்தை | குறித்துரைக்கப்பட்ட நலன்கள் பொதுமக்களுக்கு சென்றடையவில்லை. | விற்பனையாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் பிரதேச சபையானது கடைகளை உப பிரிவிடுவதற்கு தீர்மானித்திருந்தது. கடைகளின் உப பிரிவுகளை பூர்த்தி செய்வதுடன் வாராந்த சந்தை செயற்பாடுகளை தொடங்கும். | கட்டிடத்தை குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களிற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | கிரம பேருந்து நிலையம் | குறித்துரைக்கப்பட்ட நலன்கள் பொதுமக்களுக்கு சென்றடையவில்லை. | பேரூந்து நிலையத்திற்கு இரண்டு அணுகும் வீதிகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | பேரூந்து நிலையத்தை பயன்படுத்துவதற்கு தேவையான வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | வில்கமுவவ மயானம் | குறித்துரைக்கப்பட்ட நலன்கள் பொதுமக்களுக்கு சென்றடையவில்லை. | கட்டிட நிர்மாணங்கள் பூர்த்திசெய்யப்பட்டு பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளதுடன் காலதாமதமின்றி நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு பிரதேச சபைக்கு அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது. இக் கட்டிடத்தை குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பொறுப்பாகும். | வில்கமுவ பிரதேசத்தில் மயானம் நிர்மாணிக்கப்படுவதன் அவசியத்தை முறையாக மதிப்பீடு செய்து செயற்திட்டத்தினால் வழங்கப்பட்ட நிதிகள் வீணடிக்கப்படாமல் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஒ) | வில்கமுவ நீர் வழங்கல் திட்டம் | இப்பகுதியில் 350 குடும்பங்களுக்கு குடிநீர் வசதிகள் இல்லை. | சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிபுணர்களுடன் கலந்தாலோசித்து தவறுகளை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஓ) | திக்லந்த நீர் வழங்கல் திட்டம் | குறித்துரைக்கப்பட்ட நலன்கள் பொதுமக்களுக்கு சென்றடையவில்லை. | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் அறிவுறுத்தப்பட்டவாறு சுத்திகரிப்பு பொறியை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஔ) | ஓய்வு நிலையம் - இபலோகம | குறித்துரைக்கப்பட்ட நலன்கள் பொதுமக்களுக்கு சென்றடையவில்லை. | நீர் வழங்கல் திட்டம் பூர்த்தியடைந்த பின்னர் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (க) | வெல்லவாய மயானம் | குறித்துரைக்கப்பட்ட நலன்கள் பொதுமக்களுக்கு சென்றடையவில்லை. | மயானத்தை பயன்படுத்துவதற்கு மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிபுணர்களுடன் கலந்தாலோசித்து தவறுகளை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | **சொத்து முகாமைத்துவ மென்பொருள்** அவுஸ்ரேலிய தனியார் கம்பனியுடன் 2018 திசெம்பர் 15 இல் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையொன்றின் கீழ் ஏழு மாகாணங்களில் உள்ள ஏழு பிரதேச சபைகளுக்கு உப செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டது. இவ் உப செயற்திட்டத்தின் நோக்கம் சொத்து முகாமைத்துவ மென்பொருளை ஆரம்ப செயற்திட்டமொன்றாக உருவாக்குவதாகும். 2006 ஜனவரி 25 ஆம் திகதிய 08 ஆம் இலக்க தேசிய பெறுகை முகவராண்மை சுற்றறிக்கையின் மூலம் வேண்டப்பட்ட பெறுகை நடைமுறைகளில்லாமல் வெளிநாட்டு தனியார் கம்பனி இந்த ஒப்பந்தத்திற்காக தெரிவுசெய்யப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மேற்படி உடன்படிக்கையில் மென்பொருளின் ஆதரவு மற்றும் பராமரிப்பு முறைமைக்காக எந்தவொரு ஏற்பாடும் காணப்படாதமை மேலும் வெளிப்படுத்தப்பட்டது. மேலும் இலங்கையில் உள்ளூராட்சித் துறையில் நடைமுறையில் உள்ள விதிகள் மற்றும் கையேடுகளைப் படிப்பதன் மூலம் எந்தவொரு சாத்தியவள ஆய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேற்படி உடன்படிக்கையில் உள்ள வேலைத் திட்டத்தின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திட்டமிடப்பட்டவாறு செயற்பாடுகளை நிறுவுதல் மற்றும் ‘‘பயிற்சி மூலப்பொருட்களை உருவாக்குதல் மற்றும் பதவியணியினர் பயிற்சியை பூர்த்தி செய்தல்’’ ஆகியவை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆசிய அபிவிருத்தி வங்கியின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட செயற்திட்டம் மற்றும் பெறுகை அறிவித்தலின் கட்டளைக்கு இச் செயற்பாடு செயன்முறைப்படுத்தப்படுகின்றது. | செயற்திட்டமானது தேவையான தரத்தை உறுதிப்படுத்தி உடனடியாக வேலையை பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்ததாரரிற்கு ஊக்குவிப்பை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | பொறியியலாளர் ஒருவர் ஒரு வருடத்திற்கு தொழில்நுட்ப கணக்காய்விற்கான தனிப்பட்ட ஆலோசனையாளராக தெரிவுசெய்யப்பட்டிருந்தார். பின்னர் அவரது காலப்பகுதி 2019 நவம்பர் வரை நீடிக்கப்பட்டு ரூபா 12.47 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. அமைச்சின் செயலாளர் மற்றும் தொழில்நுட்ப | தொழில்நுட்ப கணக்காய்வு ஆலோசனையாளர் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு ஒப்பந்த பெறுகையை பொறுப்பேற்பதற்கு உதவியிருந்தார். | செயற்திட்டம் கொடுப்பனவை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

கணக்காய்வு ஆலோசனையாளர் ஆகியோரால் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் காலத்திற்கு காலம் வழங்கப்பட்ட குறிப்பு விதிமுறைகள் மற்றும் வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டியதுடன் குறிப்பு விதிமுறைகளின் கீழ் வரையறுக்கப்பட்ட பல்வேறு நோக்கங்கள் மற்றும் பணிகள் தொடர்பாக குறித்துரைக்கப்பட்ட பிரிவை உள்ளடக்கியிருக்க வேண்டும். தொழில்நுட்ப கணக்காய்வு ஆலோசனையாளர் முக்கிய பிரச்சனைகள் மற்றும் பரிந்துரைகளை இறுதி அறிக்கையில் பதிவு செய்ய வேண்டிய போதிலும் அவ் அறிக்கையானது முக்கிய பிரச்சனைகள் மற்றும் பரிந்துரைகள் எதனையும் கொண்டிருக்கவில்லை.